# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

**Tamil Study Centre - Mount Druitt**

*Email :mtdruitttsc@gmail.com Mobile: 0449 892 066 Web : www.mtsc.org.au*

## பேச்சுப்போட்டி– 2018

## ஆண்டு 7

## வாழ்ந்துகாட்டு

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

நான் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு **வாழ்ந்துகாட்டு**. ஆமாம் ….. **வாழ்ந்துகாட்டு**.

இறைவன் படைத்த இந்த இனிய வியத்தகு உலகில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். நமக்குக் கிடைத்த இந்தக் குறுகிய வாழ்வுக்காலத்தை நமக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைத்துக்கொண்டு முன்மாதிரியாக நமது வாழ்க்கையை வாழ வேண்டும்.

இந்த உலகில் நல்ல வாழ்வைப் பெறுவதற்கு பெற்றோர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும், ஏனைய பெரியோர்களும் நமக்கு ஏணிப்படிகளாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்றும் நாம் நன்றிக்கடன் பட்டவர்களாக இருப்பதோடு, அவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் செலுத்துதல் நமது தலையாய கடமையாகும்.

**“கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக”** என்ற வள்ளுவரின் கூற்றின்படி கற்ற கல்விக்கேற்ப அதன் நெறிமுறைகளின் படி நமது வாழ்ககையை ஒழுக்கமுள்ளதாகவும் நல்லதாகவும் பேணி சமுகத்தின் நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டும்.

ஒருவன் எல்லாவற்றையும் இழந்தாலும் அவன் கற்ற கல்வியை ஒருபோதும் இழக்கமாட்டான். ஏனெனில் கற்ற கல்வி இறப்புவரை நின்று நிலைத்து நீடித்து ஒருவனைப் பாதுகாக்கும்.

எமது வாழ்வைச் சுயநலமாக அமைக்கக் கூடாது. நாம் அனைவருக்காகவும் வாழ்ந்து காட்டுதல் வேண்டும். நாம் பெற்ற கல்விச் செல்வம் எப்போது மற்றவர்களுக்குப் பயனிபடுகின்றதோ, அன்றுதான் வாழ்வின் பயனை நாம் முழுமையாக அடைவோம்.

எனவே நாம் **“பார் போற்றும்படி வாழ்ந்து காட்டுவோம்”** என்று கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் எல்விஸ் எமிலியானுஸ்